தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

8.03.2013 A.M

## வருசநாடு அருகே மூலவைகைக்கு நீர்வ

தேனி மாவட்டம், வருசநாடு அருகே மூல வைகை நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை பெய்வதால், மூல வைகை ஆற்றுக்கு நீர்வரத்து துவங்கியுள்ளது.

போதிய மழை இல்லாததால், கடந்த 10 மாதங்களாக மூல வைகை ஆறு வறண்டு காணப்பட்டது. இதனால், வைகை அணையின் நீர்மட்டம் குறைந்து வந்தது. எனவே, அணையிலிருந்து பாசனத்துக்காக திறந்து விடப்பட்ட நீர் நிறுத்தி வைக்கப்பட்டது.

இதனால், பெரியாறு பாசன பகுதிகளான 1,50,043 ஏக்கர் இரு போகம் மற்றும் ஒரு போக விவசாய நிலங்களில் விவசாயம் செய்ய முடியாமல் இருந்தது.

இந்நிலையில், குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக, கடந்த புதன்கிழமை முதல் வைகை அணைக்கு நீர் ஆதாரமாக விளங்கும் மூலவைகை நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை பெய்யத் தொடங்கியது. இதனால், வருசநாடு அருகே மூலவைகை ஆற்றில் தற்போது நீர்வரத்துத் துவங்கியுள்ளது.

அணைகளின் நீர்மட்டம்:

வைகை அணை நீர்மட்டம் - 47 அடி, நீர்வரத்து - 28 கனஅடி, வெளியேற்றம் - 60 கனஅடி.
பெரியாறு அணை நீர்மட்டம் - 112.5 அடி, நீர்வரத்து - 297 கனஅடி, நீர் வெளியேற்றம் - 100 கனஅடி.

மழையளவு (மி.மீ.):

வைகை- 17, தேக்கடி- 16.2, பெரியாறு- 4, சண்முகா நதி- 3, பேரணை- 16, தேனி- 22, ஆண்டிபட்டி- 22, மஞ்சளாறு- 2, வீரபாண்டி- 8, பாளையம்-15, கூடலூர்- 4.6, சோத்துப்பாறை- 2.

## விருதுநகர் மாவட்டத்தில் மழையால் அறுவடை பாதிப்பு

விருதுநகர் மாவட்டத்தில் கடந்த இரண்டு நாள்களாக மழை பெய்து வருவதால் தானியப் பயிர்களை அறுவடை செய்யும் பணி பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

விருதுநகர் மாவட்டத்தில் கடந்த மூன்று நாள்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இப்பகுதிகளில் உள்ள விருதுநகர், செங்குன்றாபுரம், செங்கோட்டை, வெள்ளூர், ஆமத்தூர், சங்கரலிங்காபுரம், ஒண்டிப்புலிநாயக்கனூர், சிவகாசி, சாத்தூர், ஏழாயிரம்பண்ணை, ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம் ஆகிய பகுதிகளில் மானாவாரியில் பயிரிடப்பட்டிருந்த மக்காச்சோளம் உள்ளிட்ட தானியப் பயிர்கள் வறட்சியால் சாகுபடி செய்ய முடியாத நிலையில் கருகி போயிருந்தன. இதை மாட்டுத்தீவனத்துக்காக விவசாயிகள் அறுவடை செய்து படப்புகளாக சேகரித்து வரும் பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த இரண்டு நாள்களாக இப்பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருகிறது. இதுபோன்ற காரணங்களால் அறுவடை செய்யப்பட்ட தட்டைகள் அனைத்தும் நனைந்து போனது. இதனால், மாட்டுத் தீவனத்துக்கும் வழியில்லாத நிலையேற்பட்டுள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

## வயல் தின விழா

சிவகாசி வேலாண்மைத்துறை, அட்டமாதிட்டம் சார்பில் கங்கர்செவல், குண்டாயிருப்பு ஆகிய ஊர்களில் வயல் தினவிழா நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு வேளாண்மை உதவி இயக்குநர் வனஜா தலைமை வகித்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் முத்துசெல்வி மக்காசோளம், திருந்திய நெல் சாகுபடி குறித்துப் பேசினார். ஏற்பாடுகளை தொழில்நுட்ப வல்லுனர்கள் தாமரைசெல்வி, சதீஷ்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.

## பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு: பில்லூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பு

பில்லூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டதால், பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து 2,655 கனஅடியாக அதிகரித்துள்ளது.

ஈரோடு மாவட்ட மக்களின் முக்கிய நீராதாரமாக உள்ளது பவானிசாகர் அணை. இந்த அணையால் சத்தி, கோபி, பவானி, ஈரோடு, பெருந்துறை, காங்கயம் மற்றும் கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி பகுதிகளில் உள்ள சுமார் 2 லட்சத்து 7 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசனம் பெறுகின்றன.

வியாழக்கிழமை இரவு 7 மணி நிலவரப்படி பவானிசாகர் அணை நீர்மட்டம் 34 அடியாக இருந்தது. அதாவது, 1.60 டி.எம்.சி. தண்ணீர் மட்டுமே இருப்பு உள்ளது. அணைக்கு நீர்வரத்து 2 ஆயிரத்து 655 கன அடியாகவும், அணையில் இருந்து ஆற்றுக்கு 150 கன அடி நீரும்

திறந்துவிடப்படுகிறது. கால்வாய்க்கு 5 கன அடி நீர் மட்டுமே வெளியேறுகிறது.

கடந்த ஆண்டு பருவமழை பொய்த்துவிட்டதால் நீர்வரத்து குறைந்து அணை நீர்மட்டமும் சரிந்துவிட்டது. கோடைத் தாக்கம் காரணமாக வனப்பகுதியிலும் போதிய மழை இல்லை. இதனால், அணை நீர்மட்டம் படிப்படியாகக் குறைந்து வருவதால் பில்லூர் அணையில் இருந்து மின் உற்பத்திக்காக 3 ஆயிரம் கன அடி வீதம் காலை மற்றும் மாலை இரு வேளையும் மொத்தமாக 6 ஆயிரம் கன அடி நீர் திறந்துவிடப்படுகிறது. அங்கிருந்து வெளியேறிய தண்ணீர், மேட்டுப்பாளையம் பவானி ஆறு வழியாக பவானிசாகர் அணைக்கு வியாழக்கிழமை மாலையில் வந்து சேர்ந்தது.

வியாழக்கிழமை மாலை நிலவரப்படி நீர்வரத்து 2,600 கன அடியாக இருந்தது. வெள்ளிக்கிழமை பிற்பகல் வரை நீர்வரத்து அதிகமாக இருக்கும் என்பதால் அணை நீர்மட்டம் ஒன்றரை அடி வரை உயர வாய்ப்பு உள்ளது என பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். பில்லூரில் இருந்து 6 ஆயிரம் கன அடி நீர் திறந்துவிடப்பட்டாலும், பவானிசாகர் அணைக்கு 2 ஆயிரத்து 400 கன அடி மட்டுமே கிடைக்கும் எனவும் தெரிவித்தனர்.

## தமிழகத்தில் மழை குறையும்: மாலத்தீவு அருகே நகர்ந்தது காற்றழுத்தத் தாழ்வு நிலை

இலங்கை கடல் பகுதியில் நிலை கொண்டிருந்த குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை மாலத்தீவுகளுக்கு அருகில் நகர்ந்து விட்டதால் தமிழகத்தில் மழை குறையும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இலங்கை கடல் மற்றும் தென் மேற்கு வங்கக் கடல் பகுதிக்கு இடையில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவானது. இதனால் தமிழகம் மற்றும் புதுவையில் பலத்த மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் வெள்ளிக்கிழமைமுதல் தமிழகத்தில் மழை குறையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: இலங்கை கடல் பகுதியில் நிலை கொண்டிருந்த குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலையால் தமிழகம் முழுவதும் மழை பெய்து வருகிறது. இந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை தற்போது மாலத்தீவுகளுக்கு அருகில் நகர்ந்துள்ளது. இதனால் தமிழகம் மற்றும் புதுவையில் வெள்ளிக்கிழமைமுதல் மழை குறையும் என்று தெரிவித்தனர்.

வானிலை முன்னறிவிப்பு: தமிழகம் மற்றும் புதுவையில் சில இடங்களில் வெள்ளிக்கிழமை மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னையைப் பொருத்தவரையில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். சில பகுதிகளில் லேசான மழை பெய்யும்.

நெல்லையில் பலத்த மழை: திருநெல்வேலி மாவட்டத்தில் பெய்துவரும் பலத்த மழையால் பாபநாசம், சேர்வலாறு உள்ளிட்ட அணைகளின் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்துள்ளது.

பாபநாசம் அணையின் நீர்மட்டம் 8 அடி உயர்ந்து 52.50 அடியாகவும், சேர்வலாறு அணை நீர்மட்டம் 7 அடி உயர்ந்து 72.01 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 3.2 அடி உயர்ந்து 83.80 அடியாகவும், கடனாநதியின் நீர்மட்டம் 2.50 அடி உயர்ந்து 57 அடியாகவும், ராமநதி அணையின் நீர்மட்டம் 10 அடி உயர்ந்து 48 அடியாகவும் உள்ளது. பாபநாசம் அகஸ்தியர் அருவி, மணிமுத்தாறு அருவிகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

தமிழகத்தில் பதிவான மழை அளவு (வியாழக்கிழமை காலை நிலவரம் - மி.மீ.): பாபநாசம், மணிமுத்தாறு - 130, மன்னார்குடி - 70, காவேரிப்பாக்கம், வாலாஜா, வேலூர், திருத்துறைப்பூண்டி, பூண்டி - 50, குடியாத்தம், சிவகிரி, திருத்தணி, கடலூர், புதுக்கோட்டை - 40, செஞ்சி, திருக்கோவிலூர், விழுப்புரம், சிதம்பரம், பரங்கிப்பேட்டை, ஆம்பூர், மேல்ஆலத்தூர், சென்னை, காஞ்சிபுரம், அம்பாசமுத்திரம், சேரன்மாதேவி, கீரனூர், வேதாரண்யம் - 30, பழனி, செங்குன்றம், திருவள்ளூர், மகாபலிபுரம், ஆரணி, ஆண்டிப்பட்டி, ஆலங்குடி, ஸ்ரீவில்லிபுத்தூர், வால்பாறை, தஞ்சாவூர், மரக்காணம், கன்னியாகுமரி - 20, திண்டுக்கல், கொடைக்கானல், திண்டிவனம், கள்ளக்குறிச்சி, சிவகாசி, நெய்வேலி, பேராவூரணி, சாத்தனூர் அணை, புதுச்சேரி, பூந்தமல்லி - 10.

### கிராமத்துக்குள் புகுந்த யானைகள்: கரும்புகள் நாசம்



சேலம் மாவட்ட கிராமப் பகுதிகளில் புகுந்த யானைகள் கரும்புத் தோட்டங்களைச் சேதப்படுத்தின.

சேலம் மாவட்டம், ஆத்தூர், வாழப்பாடி வனப் பகுதிகளில் சில நாள்களாக சுற்றித்திரிந்த யானைகள் கூட்டம், சேலம் புறநகர் பகுதிகளான ஆச்சாங்குட்டப்பட்டி, வீமனூர் உள்ளிட்ட பகுதிகளில் புகுந்து அட்டகாசம் செய்து வருகின்றன.

ஆந்திர மாநில வனப் பகுதிகளில் இருந்து வழி தவறி வந்ததாக கருதப்படும் இந்த 6 யானைகளும் ஆச்சாங்குட்டப்பட்டி அருகேயுள்ள கீரிக்காடு பகுதியில் புதன்கிழமை இரவு புகுந்து ஜெயமணியின் பசு மாட்டை கொன்றன.

மேலும் பழனிசாமி, வி.கிருஷ்ணன் ஆகியோரது கரும்புத் தோட்டங்களில் புகுந்து கரும்புகளைச் சூறையாடின. பின்னர், யானைகள் அதே பகுதியில் உள்ள செங்காட்டூர் வனப் பகுதியில் மலைக் குன்றுகளுக்கு இடையே புகுந்து வியாழக்கிழமை முழுவதும் ஓய்வு எடுத்தன. யானைகளுக்கான வனப் பகுதி சேலத்தில் இல்லாததால், அவற்றை தருமபுரி வனப் பகுதிக்குள் அனுப்ப முயற்சித்து வருவதாக வனத் துறையினர் கூறுகின்றனர். ஆனால், யானைகள் கூட்டத்தை வியாழக்கிழமை இரவு பார்வையிட வந்த சேலம் கோட்ட வருவாய் அலுவலர் சதீஷ்குமார், வனப் பகுதியில் உள்ள யானைகளை யாரும் விரட்டக் கூடாது என்று காவல் துறைக்கு உத்தரவிட்டார்.

## 50 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதிக்கு அரசு அனுமதி

இந்திய உணவுக் கழகத்திலிருந்து (எப்.சி.ஐ.) கூடுதலாக 50 லட்சம் டன் கோதுமையை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு வியாழக்கிழமை அனுமதி அளித்துள்ளது.

மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் சரத் பவார் தலைமையிலான அமைச்சர்கள் குழு கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது. அரசின் சார்பில் தனியார் நிறுவனங்கள் கோதுமையை ஏற்றுமதி செய்யும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்பு 2 முறை 45 லட்சம் டன் கோதுமையை அரசுத் துறை நிறுவனங்கள் ஏற்றுமதி செய்ய அனுமதி அளித்தது குறிப்பிடத்தக்கது.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

8.03.2013 A.M

---

## இயற்கை விவசாயத்தில் ஸ்ரீவி.,விவசாயி சாதனை

ஸ்ரீவில்லிபுத்தூர்: ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே நாகபாளையத்தில், இயற்கை உரங்களை பயன்படுத்தி விவசாயம் செய்து, பருத்தியில் அதிக மகசூல் எடுத்து சாதனை படைத்துள்ளார் விவசாயி ஒருவர்.ஸ்ரீவில்லிபுத்தூர் நாகபாளையத்தை சேர்ந்தவர் குருசாமி,50. விவசாயியான இவர், ரசாயன உரங்களை தவிர்த்து, இயற்கை உரங்களான எரு, கடலை புண்ணாக்கு போன்றவைகளை உரமாக போட்டு, அரை ஏக்கர் நிலத்தில், பருத்தி விளைவித்து 17 குவிண்டால் மகசூல் பெற்று, சாதனை படைத்துள்ளார்.சாதாரணமாக அரை ஏக்கரில் பருத்தி சாகுபடி செய்தால், அதிகபட்சமாக 5 குவிண்டால் மகசூல் பெறும் நிலையில், இவரது மகசூல் சாதனையாக கருதப்படுகிறது. அவர் கூறுகையில்,"" பல ஆண்டுகளாக விவசாயம் செய்து வருகிறேன். எதிர்பார்த்த அளவு மகசூல் கிடைக்காமல் விரக்தியடைந்தேன். நண்பர் திலகராஜன் அறிவுரைபடி, இயற்கை விவசாயத்திற்கு மாறினேன். அரை ஏக்கரில் கடந்தாண்டு பருத்தி பயிர் செய்தேன். இயற்கை உரங்களான கடலை புண்ணாக்கு, வேப்பம் புண்ணாக்கு, ஆமணக்கு விதை புண்ணாக்கு ,எரு, குப்பை போன்றவைகளை உரங்களாக போட்டேன். களை வெட்டுதல், பூச்சிகளுக்கு மருந்தடித்தல் போன்ற செலவு குறைந்தது. பருத்தியிலும் ஏராளமான காய்கள் விளைந்தன. அரை ஏக்கரில் 17 குவிண்டால் பருத்தி கிடைத்தது," என்றார்.ஸ்ரீவி.,வேளாண் உதவி இயக்குனர் டாக்டர் ஆறுமுகம்,"" வறட்சி காலங்களில் கிடைக்கும் தண்ணீரை தேக்கி வைக்கும் தன்மை, இயற்கை உரங்களுக்கு உண்டு. மண்ணின் வளமும் பாதுகாக்கப்பட்டு, பயிர்களுக்கு அதிக பலனை தரும். அதன்படி விவசாயி இந்த உரங்களை பயன்படுத்தி, பருத்தி சாகுபடி செய்து அதிக மகசூலை பெற்றுள்ளார்," என்றார்.

## தக்காளி விலை வீழ்ச்சி விவசாயிகள் வேதனை

விருதுநகர்: விருதுநகரில் தக்காளி . வரத்து அதிகரிப்பால் கிலோ 3 ரூபாய்க்கு விற்றது.இதனால் விவசாயிகள் பாதிப்பில் உள்ளனர். மாவட்டத்தில் தென்மேற்கு மழை பொய்த்ததால், விவசாயம் பாதிக்கப்பட்டது. நெல், கரும்பு, மக்காச்சோளம் உள்ளிட்ட பயிர்களும் கருகின. இதனால்,

நஷ்டஈடு கேட்டு விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து, சென்னையை தவிர்த்து பிற மாவட்டங்களை, அரசு வறட்சி மாவட்டமாக அறிவித்தது. இந்நிலையில், மோட்டார் பாசானம் மூலம் விளைய வைத்த தக்காளி கிலோ எட்டு ரூபாய்க்கு விற்பனையானது. தற்போது வரத்து அதிகரிப்பால். கிலோ 3 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதனால் விவசாயிகளுக்கு நஷடம் ஏற்பட்டுள்ளது.

### கொடைக்கானலில் 55 மி.மீ., மழை

கொடைக்கானல்: கொடைக்கானலில் மார்ச் 5(செவ்வாய்) மாலை முதல் மழை பெய்து வருகிறது. நேற்று(வியாழன்) மாலை 5.30 மணியுடன் முடிவடைந்த 48 மணி நேரத்தில், 55 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. கொடைக்கானல் ஏரியில் நீர்மட்டம் ஒரு அடி உயர்ந்துள்ளது. சுற்றுலா பயணிகளின் வருகை,குறைவாகவே இருந்தது. தாண்டிக்குடி: தாண்டிக்குடி மலைப்பகுதியில் கடந்த சில நாட்களாக நல்ல மழை பெய்து வருகிறது. நேற்று மாலை வரை தடியன்குடிசையில் 34.மி.மீ. மழையும், தாண்டிக்குடியில் 30.மி.மீ.., மழை பதிவாகியது. பண்ணைக்காடு, பாச்சலூர், பூலத்தூர் பகுதியில் வரை பரவலாக பெய்தது. வானம் மேக மூட்டத்துடன் சாரல் மழை பெய்தததால் மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியது. மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மலைப்பகுதியில் நீடிக்கும் மழையை மலையடிவாரத்தில் உள்ள அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

### திண்டுக்கல் மாவட்டத்தில் மழையால் மக்கள்... மகிழ்ச்சி வனத்துறையினர் நிம்மதி

ஒட்டன்சத்திரம்: திண்டுக்கல் மாவட்டத்தில் நேற்றும் மழை பெய்தது. மழையால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். ஒட்டன்சத்திரம் பகுதியில் வழக்கமாக பெய்ய வேண்டிய பருவமழை ஏமாற்றியது. ஏரி, குளங்கள் நீர்வரத்தின்றி வறண்டு காணப்பட்டது. நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்தது. மழையை நம்பி விதைக்கப்பட்ட மானாவாரி பயிர்கள் காய்ந்தன. கிணறுகளிலும் நீர் வற்றத் துவங்கியது.பயிரிடப்பட்ட, தக்காளி, கத்தரி உள்ளிட்ட பயிர்களும் வாடத் துவங்கின. இந்நிலையில் நேற்றுமுன்தினம் பெய்த மழையால், பூமி குளிர்ந்து, குளிர்காற்று வீசியது. பொதுமக்கள் மத்தியில் மகிழ்ச்சி நிலவியது.அதேசமயம், முத்துநாயக்கன்பட்டி, புலியூர்நத்தம், அம்பிளிக்கை உள்ளிட்ட பகுதிகளில் புகையிலை மற்றும் மக்காச்சோளத் தட்டு அறுவடை செய்யப்பட்டு காயவைக்கப்பட்டிருந்தது. இவை மழையில் நனைந்ததால் விவசாயிகள் கவலையடைந்தனர். ஒட்டன்சத்திரம் விவசாயி திருமூர்த்தி கூறுகையில், ""இம்மழை, அறுவடை செய்த விவசாயிகளுக்கு சாதகமாக அமையவில்லை. அதேசமயம் நீரின்றி வாடும் பயிர்களுக்கு

பயனுள்ளதாக இருக்கும்," என்றார்.வனத்துறை நிம்மதி: நறுமண சுற்றுலா மையம் தடியன்குடிசையில் அதிகபட்சமாக 32.மி.மீ, தாண்டிக்குடியில் 18.மி.மீ., மழையும் பெய்தது. பண்ணைக்காடு, பாச்சலூர் வரை மழை நீடித்தது. காட்டுத் தீயிலிருந்து வனப்பகுதிகள் தற்போதைய மழையால் தப்பியது வனத்துறையினருக்கும் நிம்மதியை தந்துள்ளது.

**மண் வளத்தை அதிகரிக்க விவசாயத்துறை மானியம்**

தேனி: மண் இழந்து வரும் சத்துக்களை மீட்க, மண்ணில் பசுந்தாள்களை வளர்த்து மக்கச் செய்யும் முறையினை பயன்படுத்த விவசாயத்துறை முடிவு செய்துள்ளது. தக்கப்பூடு போன்ற, பசுந்தாள் உரப்பயிர்களை வளர்க்க 50 சதவீதம் மானியத்தில் விதைகளை வழங்கி வருகிறது.விதைத்த 45வது நாளில் இந்த பசுந்தாள்களை மண்ணில் உழுது விடலாம்.தேனி மாவட்டத்தில் 1400 எக்டேருக்கு பசுந்தாள் உரங்கள் மானியத்தில் வழங்கப்பட உள்ளன. உழவு செய்வதற்கும் மானியம் வழங்கப்படும். விவசாயிகள் விவசாயத்துறை அதிகாரிகளை அணுகி பெற்றுக்கொள்ளலாம்.

**ரூ.150க்கு குண்டு மல்லி விற்பனை: வரத்து அதிகரிப்பால் விலை சரிவு**

ஈரோடு: பனிப்பொழிவு, கோடை வெயிலின் தாக்கம் அதிகரிப்பால், குண்டு மல்லி உற்பத்தி அதிகரித்து, கிலோ 150 ரூபாய்க்கு விற்பனை செய்கின்றனர்.

சத்தியமங்கலம், அந்தியூர், சேலம், நாமக்கல் ஆகிய இடங்களில் இருந்து குண்டு மல்லி, காகட்டான், கனகாம்பரம், முல்லை, செவ்வந்தி போன்ற பூக்களும், மேட்டுப்பாளையம், ஓசூர், பெங்களூரு ஆகிய இடங்களில் இருந்து பட்டன் ரோஸ், ஊட்டி ரோஸ், டேலியா, ஆகிய பூக்களை விற்பனைக்கு அனுப்புகின்றனர்.

நாளென்றுக்கு இரண்டு டன் பூக்கள் விற்பனைக்கு வருகிறது. கடந்த மாத இறுதி வரையிலும், குண்டு மல்லி வரத்து குறைந்து, கிலோ, 1,000 ரூபாய் வரையிலும் விற்பனையானது. தொடர் ந்து முகூர்த்த நாட்கள், உள்ளூர் பண்டிகை காரணமாக கிலோ, 600 ரூபாய்க்கு விற்கப்பட்டது. இந்நிலையில், கடந்த சில நாட்களாக பூக்கடைகளில் குண்டு மல்லி பூக்கள் விற்பனைக்கு குவிந்துள்ளது. அதிகாலை கிலோ, 150 ரூபாயில் துவங்கும் வியாபாரம், மாலையில், 100 ரூபாய் வரையில் விற்பனை செய்கின்றனர்.

இதுபற்றி நேதாஜி மார்க்கெட் பூ வியாபாரி யூசுப் கூறியதாவது:

கடந்த சில வாரங்களாக, பின் இரவில் பனிப்பொழிவும், பகல் நேரத்தில் வெயிலின் தாக்கம் அதிகரித்ததால், குண்டு மல்லிப்பூ அதிகப்படியாக உற்பத்தியாகிறது. சத்தியமங்கலம், அந்தியூர்,

சேலம் மார்க்கெட்டில் இருந்து, வழக்கத்துக்கும் அதிகமாக, இரண்டு மடங்கு பூக்கள் விற்பனை வருகிறது. மொத்த விலையில், கிலோவுக்கு, 150 ரூபாய்யும், சில்லறை விலையில், 200 ரூபாய்யும், கட்டி விற்பனை செய்யும் போது, முழம், 15 ரூபாய் முதல், நெருக்கமாக கட்டியவை முழம், 20 ரூபாய்க்கு விற்பனை செய்கிறோம்.

நகரில் கோவில் திருவிழாக்கள் துவங்கியுள்ளதால் பூக்களின் விற்பனை அதிகரித்துள்ளது. விலை குறைந்ததால் அதிகமாக மக்கள் வாங்கி பயன்படுத்துகின்றனர். கோடை காலம் முடியும் வரையில் பூ வரத்து அதிகமாகவும், விலை கட்டுப்பாட்டில் இருக்கும், என்றார்.

### லிட்டர் பாலுக்கு ரூ.5 மானியம் வேண்டும்

ஈரோடு: வறட்சியால், கூடுதல் விலைக்கு தீவனங்களை வாங் கி, பால் கொள்முதல் செய்வதால், ஆறு மாத காலத்துக்கு, உற்பத்தியாளர் வழங்கும் பாலுக்கு, லிட்டர் ஒன்றுக்கு, ஐந்து ரூபாய் மானியமும், கலப்பு திவனத்தின் விலையை குறைக்க வேண்டும் என பால் உற்பத்தியாளர்கள் அரசை கோரியுள்ளனர்.

ஈரோட்டில், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நலச்சங்க மாநில செயற்குழு கூட்டம், மாநிலத்தலைவர் செங்கோட்டுவேல் தலைமையில் நடந்தது.

வறட்சியால், பசுந்தீவனம், உலர் தீவனம், அடர் தீவனம் வழங்குவதற்காக, 35 கோடி ரூபாய்யை தமிழக அரசு ஒதுக்கியுள்ளது. மாநிலத்தில் பால் உற்பத்தியில், 8,000 ஆவின் கூட்டுறவு சங்களின் உறுப்பினர்களாக, ஐந்து லட்சம் பேர் உள்ளனர்.

தினமும், 22 லட்சம் லிட்டம் பாலை உற்பத்தி செய்து வருகின்றனர். தமிழகத்தில் கடந்த ஓராண்டாக மழையின்றி, விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். கால்நடைக்களுக்கு தீவனம் கிடைக்காமல், பால் உற்பத்தியாளர்கள் சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர்.

சில மாதத்துக்கு முன், பத்து ரூபாய்க்கு விற்ற சோளத்தட்டு, 25 ரூபாய் கொடுத்தாலும் இன்று கிடைப்பதில்லை. அதிகவிலை கொடுத்து வாங்கும் மாடுகளுக்கு, கலப்பு தீவனம் கொடுத்து, பால் உற்பத்தியை அதிகப்படுத்த விவசாயிகள் முற்படுகின்றனர்.

தீவனம் கிடைக்காமலும், கலப்பு தீவனத்தின் விலையும், 16 ரூபாயாக உள்ளதால், உற்பத்தி செய்யும் பாலுக்கு விலை கட்டுப்படியாக வில்லை. தமிழக கூட்டுறவு சொசைட்டிகளில் ரிச்மண்ட் முறைப்படி, பாலின் தரத்தை தர பரிசோதனை செய்கின்றனர்.

கர்நாடகா, கேரளா, ஆந்திராவில் ஐ.எஸ்.ஐ., முறையில் தர பரிசோதனை செய்கின்றனர்.

ரிச்மண்ட் முறையால், லிட்டருக்கு, 32 காசு வரை விலை குறைக்கப்படுகிறது. மற்ற மாநிலங்களை

போல ஐ.எஸ்.ஐ., முறைப்படி தர பரிசோதனை செய்ய பத்தாண்டுகளாக கோரி வருகிறோம். ஆவின், வெளிமாநில கலப்பின தீவனம் கிலோ ஒன்று, 16 ரூபாய்க்கு விலையில் கிடைக்கிறது. உற்பத்தியாளர் நலன் கருதி, ஆவின் கூட்டுறவு சொசைட்டிகள் கொள்முதல் செய்யும் பாலுக்கு, ஆறு மாத காலத்துக்கு லிட்டர் ஒன்றுக்கு, ஐந்து ரூபாய் மானியம் வழங்க வேண்டும். கலப்பின தீவனத்தின் விலையில், ஆறு ரூபாய் குறைத்து, கிலோ, 10 ரூபாய்க்கு வழங்க உத்தரவிடவேண்டும்.

பத்தாண்டுக்கு மேலாக, கூட்டுறவு சொசைட்டிகளில், 4,000 ரூபாய் சம்பளத்தில் பணியாற்றும், 24 ஆயிரம் பணியாளர்களை நிரந்தரம் செய்யவேண்டும். கூட்டுறவு தேர்தலில் போட்டியிடும், உண்மையான பால் உற்பத்தியாளர்களை, பதவிகளுக்கு தேர்வு செய்ய, மாநிலம் முழுவதும் துண்டுப்பிரசுரம் வழங்கி பிரச்சாரம் மேற்கொள்ளப்படும், என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நலச்சங்க பொதுச்செயலாளர் ராஜேந்திரன், பொருளாளர் ராமசாமி கவுண்டர் உட்பட பலர் பங்கேற்றனர்.

### நாணல் பூக்கூடை ரூ.80க்கு விற்பனை

ஈரோடு: திருச்சி மாவட்டம் சிறுகமணி கிராமப்புற பகுதியில் தயாரிக்கப்பட்ட, நாணல் பூக்கூடைகள் விற்பனை ஈரோட்டில் களை கட்டியுள்ளது.

பொதுமக்கள் கோவில்களுக்கு பூஜை பொருட்களை எடுத்துச் செல்ல, பிளாஸ்டிக், சில்வர், பேப்பர், நாணல் மூலம் தயாரிக்கப்பட்ட பூக்கூடைகளை பயன்படுத்தி வருகின்றனர்.

கிராமப்புறங்களில் சிறுதொழில் செய்பவர்கள், நாணல் மூலம் பூக்கூடைகளை தயாரித்து, பல வண்ணங்களில், விற்பனை செய்கின்றனர்.

ஈரோடு நகரில் ரயில்வே ஸ்டேஷன், பிரப் ரோடு, மாரியம்மன் கோவில், பஸ் ஸ்டாண்ட் உள்ளிட்ட பல பகுதிகளில், நாணல் மூலம் தயாரித்த பூக்கூடையை, திருச்சி மாவட்டத்தை சேர்ந்த ஆண், பெண் வியாபாரிகள் விற்பனை செய்தனர். அழகிய தோற்றத்துடன், மூடியுடன் கூடிய பூக்கூடைகளை மக்கள் ஆர்வமுடன் வாங்கி சென்றனர்.

இதுபற்றி பூக்கூடை விற்பனை செய்த ரங்கசாமி கூறியதாவது: திருச்சி மாவட்டம், சிறுகமணி சொந்த ஊர். காவிரி ஆற்றின் கரையில் வளரும் நாணல்களை கொண்டு, சொப்பு, கூடைகள், முரம், பாய், பூக்கூடை தயாரித்து, வெளியூர்களில் வியாபாரம் செய்கிறோம். எங்கள் பகுதியை சேர்ந்த, பத்துக்கும் மேற்பட்ட குடும்பத்தினர், ஈரோட்டில் பூக்கூடை தயாரித்து விற்பனை செய்து வருகிறோம். சாதாரண பூக்கூடை, 80 ரூபாய்க்கும், மூடி போடப்பட்ட கூடை, 110 ரூபாய்க்கு

விற்பனை செய்கிறோம். முறையாக பயன்படுத்தினால், பத்து ஆண்டுகள் வரையிலும் பயன்படுத்தலாம். சாயம், பெயிண்ட் அடிக்காமல், இயற்கையாக உள்ளபடியும் பூக்கூடைகளை தயாரித்து விற்பனை செய்கிறோம். பார்ப்பதற்கு அழகாகவும், எடுத்து செல்ல எளிமையாகவும் இருப்பதால், நாணல் பூக்கூடைகளின் விற்பனை ஈரோட்டில் ஜோராக நடக்கிறது, என்றார்.

## மழையால் "குளிர்ந்தது' மதுரை: விவசாய பணி துவங்கியது

சோழவந்தான்: மதுரையில், சில நாட்களாக மழை பெய்ததால், வறண்டு கிடந்த பூமி குளிர்ந்தது. சோழவந்தான், குருவித்துறை, கருப்பட்டி பகுதிகளில் விவசாயப்பணிகள் துவங்கின.பருவமழை பொய்த்து வருவதால் விவசாயப் பணிகள் தடைபட்டு வருகிறது. மதுரையில் இரண்டு ஆண்டுகளாக பருவமழை கை கொடுக்கவில்லை. அணைகள், கண்மாய்கள் வறண்டன. ஆண்டுக்கு இருபோகம் கண்ட விவசாயம் மானாவாரியானது. கிணற்றுப் பாசனம் மூலம் ஆங்காங்கே விவசாயம் நடக்கிறது. எனினும், மின் வெட்டு காரணமாக கிணற்றுப் பாசனமும் சொல்லும்படியாக இல்லை. பூமி வறண்டு வருவதால், குடிநீர் பஞ்சம் ஏற்படும் அபாயம் நிலவியது.பூமித்தாய் குளிர்ந்தாள்: மதுரையில் சில நாட்களாக மழை பெய்ததால், வறண்ட பூமி குளிர்ந்துள்ளது. விவசாயிகள் மானாவாரிக்கான உழவடையை மேற்கொண்டுள்ளனர். சோழவந்தான், குருவித்துறை, கருப்பட்டி பகுதிகளில் நெல், வாழை, கரும்பு சாகுபடி அதிகளவு நடக்கும். மழையின்மையால் பயிர் வகைகள் மற்றும் காய்கறிகளை சிறிய அளவில் பயிரிட்டுள்ளனர். நிலத்தை உழவடை செய்யும் அளவுக்கு மழை நீர் தேங்கியதால், டிராக்டர் மூலம் உழவுப்பணியை விவசாயிகள் செய்து வருகின்றனர்.15 நாள் மழை தேவை: கொடிமங்கலம் விவசாயி தங்கம் கூறுகையில், ""இம்மழை போதாது. 15 நாட்களாவது தொடர்ந்து பெய்தால்தான் பயிர்களை காப்பாற்ற முடியும். தற்போது பெய்த மழையில் நிலம் குளிர்ந்துள்ளது. இம்மழை கிணற்றுப்பாசன விவசாயிகளுக்கு கைகொடுக்கும். மழையே இல்லாத நேரத்தில் இது ஆறுதல் தந்துள்ளது," என்றார்.மேலக்கால் விவசாயி குமார்சங்கர் கூறுகையில், ""50 சென்ட் நிலம் உள்ளது. மழையில்லாததால் தரிசாக வைத்திருந்தேன். சில நாட்களாக பெய்த மழையால், மானாவாரி சாகுபடி செய்யவுள்ளேன். எனினும், தொடர்ந்து மழை பெய்தால்தான் கிணறுகள், கண்மாய்கள் நிரம்பும். கிணற்றில் தண்ணீர் இருந்தாலும், மின் வெட்டு நிலவுவதால் விவசாயப்பணி பாதிக்கிறது," என்றார்.

## கால்நடைகளுக்கு உணவாகும் வாழை




பொங்கலூர் : தண்ணீர் இல்லாததால், கால்நடைகளை, விவசாயிகள், வாழைக்காட்டில் மேய்ச்சலுக்கு விட்டுள்ளனர்.பொங்கலூர் வட்டாரத்தில், நேந்திரன், பூவன், ரபோஸ்டா உள்ளிட்ட வாழை ரகங் களை விவŒõயிகள் சாகுபடி செய்திருந்தனர். தற்போது, கடும் வறட்சி ஏற்பட்டுள் ளதால், தண்ணீரின்றி வாழை மரங்கள் கருகி வருகின்றன. பல ஆயிரக்கணக்கான ரூபாய் செலவில் சாகுபடி செய்யப்பட்டுள்ள வாழை மரங்கள் கருகி, விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது.தற்போது, கருகி வரும் வாழைக்காட்டில், விவசாயிகள், கால்நடைகளை மேய்ச்சலுக்கு விட்டுள்ளனர். மழை இல்லாததால், பசுந்தீவன பயிர்கள் வறண்டு விட்டன. வாழைக்கு போட்ட கொள்முதல் எடுக்க முடியாவிட்டாலும், மாடுகளுக்கான தீவன பிரச்னை சிறிதளவு குறைந்துள்ளது, என விவசாயிகள் ஆறுதல் அடைந்துள்ளனர். விவசாயிகள் கூறுகையில், "கோடை காலத்தில் ஏற்படும் தீவன பற்றாக்குறையை ஈடுகட்ட, காய்ந்த சோளத்தட்டைகளை கொடுத்து நிலைமையை சமாளிப்போம். இந்தாண்டு சோளத்தட்டைகளும் கா#ந்து விட்டன. தீவனம் வாங்குவதற்கு பெருந்தொகையை öŒல விட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, தண்ணீரின்றி கருகி வீணாகி வரும் வாழைக்காட்டில் மாடுகளை மேயவிட்டுள்ளோம். வாங்கிய கடனை எப்படி திருப்பி öŒலுத்துவது என்று தெரிய வில்லை,' என்றனர்.

## மலிவு விலை ஏலக்காய் இறக்குமதியை கட்டுப்படுத்த மத்திய அரசு பரிசீலனை



புதுடில்லி:வெளிநாடுகளில் இருந்து, மலிவு விலை ஏலக்காய் வருவதை தடுக்க, அதற்கு குறைந்தபட்ச இறக்குமதி விலையை நிர்ணயம் செய்வது குறித்து, மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.

கவுதமாலா, பாகிஸ்தான், நேபாளம், வங்கதேசம் ஆகிய நாடுகளில் இருந்து, விலை குறைந்த ஏலக்காய், அதிக அளவில்இறக்குமதியாகி வருகிறது.இத்துடன், வெளிநாடுகளில் இருந்து, சட்டத்திற்கு புறம்பான வகையில் ஏலக்காய் கடத்தி வரப்படுகிறது. இதனால், உள்நாட்டில் இதன் விலை வீழ்ச்சி கண்டுள்ளது.

இதையடுத்து, ஏலக்காய் கடத்தலை தடுக்கவும், மலிவு விலையில் இறக்குமதி செய்வதை கட்டுப்படுத்தவும், நடவடிக்கை எடுக்க வேண்டும் என, விவசாயிகள் மற்றும் வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.அதே சமயம், ஏலக்காய் விலை, குறிப்பிடத்தக்க அளவிற்கு ஒன்றும் குறையவில்லை என, நறுமணப் பொருள்கள் வாரியம் தெரிவித்து உள்ளது.

சென்ற ஆண்டு, பிற்பகுதியில் இருந்து தான், ஏலக்காய் இறக்குமதி சூடுபிடித்துள்ளது. கடந்த ஒன்பது மாதங்களில், ஏலக்காய் இறக்குமதி, 200 டன் என்ற அளவிற்கே உள்ளது. ஏல மையங்களில், ஒரு கிலோ ஏலக்காய் விலை, சராசரியாக, 696 - 787 ரூபாய் என்ற அளவிற்கே ஏற்ற, இறக்கத்துடன் காணப்படுவதாக, வாரியத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்நிலையில், மலிவு விலை ஏலக்காய் வரத்தை குறைக்க, அதற்கு, குறைந்தபட்ச இறக்குமதி விலையை நிர்ணயிப்பது குறித்து, மத்திய வர்த்தக அமைச்சகம் ஆலோசித்து வருகிறது.இத்திட்டம் நடைமுறைக்கு வந்தால், மலிவு விலை ஏலக்காய் வரத்து கட்டுப்படுத்தப்பட்டு, உள்நாட்டில் அதன் விலை, நிலையாக இருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

## தாவர எண்ணெய் இறக்குமதி 1.09 கோடி டன்னாக உயரும்



புதுடில்லி:நடப்பு எண்ணெய் சந்தைப்படுத்தும் பருவத்தில் (நவ.,-அக்.,), நாட்டின், தாவர எண்ணெய் இறக்குமதி, கடந்த பருவத்தை விட, 7 சதவீதம் அதிகரித்து, 1.09 கோடி டன்னாக உயரும் என, தனியார் ஆய்வு நிறுவனம் மதிப்பிட்டுள்ளது.

உள்நாட்டில், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி குறைந்துள்ளது. தேவையை பூர்த்தி செய்ய, மத்திய அரசு, தாவர எண்ணெய் வகைகளை அதிக அளவில் இறக்குமதி செய்து வருகிறது.

**இறக்குமதி:** கடந்த பருவத்தில், நாட்டின், தாவர எண்ணெய் இறக்குமதி, 1.02 கோடி டன்னாக இருந்தது. இது, நடப்பு பருவத்தில், 1.09 கோடி டன்னாக அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப் படுகிறது.

**பயன்பாடு:**உள்நாட்டில், நடப்பு 2012-13ம் பருவத்தில், தாவர எண்ணெய் பயன்பாடு, 1.75 கோடி டன்னாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. இது, கடந்த பருவத்தில், 1.65 கோடி டன்னாக இருந்தது.உணவு பொருட்களின் விலை உயர்ந்தால், அது, நாட்டின் பணவீக்கத்தை அதிகரிக்க வழிவகுத்திடும்.

இதை கருத்தில் கொண்டே, கச்சா சமையல் எண்ணெய் மீது, 2.5 சதவீதம் என்ற அளவிலும், சுத்திகரிக் கப்பட்ட எண்ணெய் மீது, 7.5 சதவீதம் என்ற அளவிலும் குறைவாக சுங்க வரி விதிக்கப்படுகிறது.மத்திய அரசு, உள்நாட்டில், எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், இவற்றிற்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

**பணவீக்கம்:**பணவீக்கம் குறையும் நிலையில், நாட்டின், விவசாயிகள் மற்றும் எண்ணெய் உற்பத்தியாளர்களின் நலன் கருதி, இறக்குமதி செய்யப்படும் கச்சா சமையல் எண்ணெய் மீதான சுங்க வரி, 10 சதவீதமாகவும், சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் மீதான வரி,17.5 சதவீதமாகவும் அதிகரிக்க வாய்ப்புள்ளது என, ஆ#வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

8.03.2013 A.M

## தீவனம் விலை 50% உயர்வு பால் கொள்முதல் விலை ரூ.5 உயர்த்த வேண்டும்



சேலம் : தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்க மாநில நிர்வாகிகள் கூட்டம் சேலத்தில் நேற்று நடந்தது. துணை தலைவர் சிவாஜி தலைமை வகித்தார். உறுப்பினர்கள் பங்கேற்று ஆலோசித்தனர். முன்னதாக, மாநில பொதுச்செயலாளர் முகமது அலி கூறியதாவது: தமிழகத்தில் 2011ம் ஆண்டு நவம்பர் மாதம் பால் கொள்முதல் விலை லிட்டருக்கு ரூ.2 உயர்த்தப்பட்டது. அதன்பின், விலை உயர்த்தப்படவில்லை. ஆனால், கடந்த 6 மாதத்தில் கால்நடை தீவனங்களின் விலை 50 சதவீதம் உயர்ந்துள்ளது.

60 கிலோ தீவனத்தின் விலை ரூ.700ல் இருந்து ரூ.1250 ஆகவும், ஐ.பி.எல்., நிறுவன தீவனங்கள் ரூ.550ல் இருந்து ரூ.850 ஆகவும், ஆவின் தீவனம் ரூ.654ல் இருந்து ரூ.954 ஆகவும் உயர்ந்துள்ளது. எனவே, பசும்பாலுக்கு லிட்டருக்கு ரூ.5ம், எருமைப்பாலுக்கு ரூ.7ம் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கூட்டுறவு சங்கங்கள் மூலம் தினமும் சராசரியாக 26 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. இது தற்போது 22 லட்சம் லிட்டராக குறைந்துள்ளது. கர்நாடகா, கேரளாவில் உள்ளதுபோல் பால் உற்பத்தியாளர்களுக்கு தமிழக அரசும் ஒரு லிட்டர் பாலுக்கு ரூ.3 மானியம் வழங்க வேண்டும். சத்துணவில் ஆவின் பால் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## மேற்குத் தொடர்ச்சி மலையில் மழை பாபநாசம், சேர்வலாறு அணை ஒரே நாளில் 8 அடி உயர்ந்தது



நெல்லை : மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் பலத்த மழை பெய்துள்ளதால் பாபநாசம், சேர்வலாறு அணைகளின் நீர்மட்டம் ஒரே நாளில் தலா 8 அடி உயர்ந்துள்ளது.
நெல்லை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கடும் வெப்பம் நிலவியது. மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளிலும் கடும் வறட்சி நிலவியதால் பாபநாசம், சேர்வலாறு அணைகளின் நீர்மட்டம் படிப்படியாக குறைந்தது. பிசான பருவ நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ள நிலையில் அணையின் நீர்மட்டம் குறைந்ததால் விவசாயிகள் கவலை அடைந்தனர்.

இந்நிலைய¤ல¢ கடந்த 3 நாட்களாக நெல்லை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் நல்ல மழை பெய்தது. மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் கனமழை பெய்து வருவதால் வறண்டு கிடந்த அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. பாபநாசம் அணையில் 44.50 அடியாக இருந்த நீர்மட்டம் ஒரே நாளில் 8 அடி உயர்ந்து 52.50 அடியானது. அணைக்கு வ¤நாடிக்கு 3,798 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. மழை பெய்வதால் அணை மூடப¢பட்டுள்ளது.

அணைப்பகுதியில 126மி.மீ, மழை பதிவாகியுள்ளது. சேர்வலாறு அணையில் 64.96 அடியாக இருந்த நீர்மட்டம் ஒரே நாளில் 8 அடி உயர்ந்து 72.01 அடியானது. அணைப் பகுதியில் 45 மி.மீ, மழை பதிவாகியுள்ளது. மணிமுத்தாறு அணையில் 80.60 அடியாக இருந்த நீர்மட்டம் ஒரே நாளில் 3 அடி உயர்ந்து 83.80 அடியானது. அணைக்கு விநாடிக்கு 2 ஆயிரத்து 758 கன அடி தண்ணீர் வருகிறது. அணை மூடப்பட்டுள்ளது.

பிற அணைகளை பொறுத்தவரை கடனாநதியில் 22 மி.மீ, ராமநதியில் 20 மி.மீ, கருப்பாநதியில்

22 மி.மீ, குண்டாறில் 6மி.மீ, வடக்கு பச்சையாறு அணையில் 19.4மி.மீ, நம்பியாறில் 6மி.மீ, அடவிநயினார் அணையில் 10மி.மீ, மழை பதிவாகியுள்ளது. தொடர்ந்து மழை பெய்வதால் அணைகளின் நீர்மட்டம் உயர்கிறது.

நெல்லை மாவட்டத்தை பொறுத்தவரை அம்பையில் 31.2மி.மீ, ஆய்க்குடியில் 4.2 மி.மீ, சேரன்மகாதேவியில் 24.8 மிமீ, நாங்குநேரியில் 10மி.மீ, ராதாபுரம், சங்கரன்கோவில், தென்காசியில் தலா 3மி.மீ,செங்கோட்டையில் 7, சிவகிரியில் 42மி.மீ, ஆலங்குளத்தில் 5மி.மீ, வீ.கே.புதூரில் 2மி.மீ, மழை பதிவாகியுள்ளது. நெல்லையில் நேற்று காலை சிறிது நேரம் வெயில் அடித்தது. பிற்பகலுக்கு பின்னர் மழை பெய்தது.

## தூத்துக்குடி மாவட்டத்தில் திடீர் மழை பொதுமக்கள் மகிழ்ச்சி

தூத்துக்குடி, : தூத்துக்குடி மாவட்டத்தில் நேற்று காலை திடீரென மழை பெய்தது. கடந்த சிலநாட்களாக நீடித்துவந்த வெப்பத்திலிருந்து விடுதலை கிடைத்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கடும் வெயில் பொதுமக்களை வாட்டி வதைத்து வந்தது. இந்நிலையில், நேற்று அதிகாலை தொடங்கிய மழை 2 மணி நேரத்திற்கும் மேலாக தொடர்ந்து பெய்தது. தூத்துக்குடி, ஏரல் திருச்செந்தூர், சாத்தான்குளம், கோரம்பள்ளம், புதுக்கோட்டை, வேம்பார், தருவைகுளம், உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு பகுதியில் மழை பெய்தது.

இதனால் சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. வெப்பம் குறைந்து குளிர்ந்த காற்று வீசத்தொடங்கியது. இதனால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர். தொடர்ந்து மழை நீடிக்கும் என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

ஏரல் மற்றும் சுற்றுவட்டார கிராமங்களில் நேற்று காலையில் ஒரு மணி நேரம் பலத்த மழை பெய்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். ரோடுகளில் மழை தண்ணீர் பெருக்கெடுத்து ஒடியது. ஏரல் காந்திசிலை பஸ்நிறுத்தத்தில் இருந்து மெயின் பஜார் நுழைவு வாசலில் முட்டளவுக்கு மேல் தண்ணீர் தேங்கியது. இதனால் பொதுமக்கள் பஜார் உள்ளே செல்ல முடியாமல் சிரமப்பட்
டனர்.

ஏரல் பேரூராட்சி அலுவலகத்தை சுற்றி மழைநீர் அதிகளவு தேங்கியதால் பேரூராட்சி

பணியாளர்கள் சிரமப்பட்டனர். ஏரல் சினிமா தியேட்டர் முன்பிருந்து பஸ்நிலையம் வரை குண்டும் குழியுமாக இருந்த ரோட்டில் மழைநீர் பள்ளத்தில் தேங்கியதால் வாகனங்கள் செல்ல செல்ல மேலும் ரோடுகள் சேத
மடைந்தது.
ஏரலில் இருந்து முக்காணி செல்லக்கூடிய சாலையோரம் 25க்கும் மேற்பட்ட செங்கல் சூளை கள் மற்றும் சேம்பர்கள் உள்ளன. இதில் ஆயிரக்
கணக்கான தொழிலாளர் கள் வேலை செய்து வருகின்றனர். திடீர் மழை யால் செங்கல் சூளைகள் பாதிக்கப்பட்டது.

## அரசு மானியத்துடன் குழித்தட்டு முறையில் மரவள்ளிக்கிழங்கு சாகுபடி

தர்மபுரி, : தர்மபுரி மாவட்டத்தில், நோய் தாக்கு தல் இல்லாமல் தரமான செடிகளை நட குழித்தட்டு மரவள்ளி கிழங்கு நாற்று களை விவசாயிகள் பயன்படுத்த தொடங்கியுள்ளனர்.
தர்மபுரி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் முக் கிய பயிர்களில், மரவள்ளி கிழங்கும் ஒன்று. மாவட்டத்தில் மானாவரியாகவும், இறவை சாகுபடியிலும், 19 ஆயிரம் ஹெக் டேர் பரப்பளவில், மரவள்ளி கிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது. மானாவரியில் சாகு படி செய்யும் போது, விவசாயிகள் பாத்திகளில் மரவள்ளி கிழங்கு குச்சிகளை நேரடி யாக நடவு செய்து வந்தனர். இறவை முறையில் நடவு செய்ய, நாற்றங்கால் அமைத்து நடவு செய்து வந்தனர். இது போன்று நடவு செய்யும் போது, அடிக்குச்சியில் இருந்து நடுக்குச்சி வரை நாற்றுகள் நட, விவசாயிகள் மரவள்ளி கிழங்கு குச்சிகளை பயன்படுத்தி வந்தனர். இதனால், வைரஸ் நோய் மற்றும் வேர் அறுந்து பாதிக்கப்பட்டு வந்தது.
இதையடுத்து, தர்மபுரி உட்பட தமிழகத்தில் பெரும்பாலான மரவள்ளி கிழங்கு விவசாயிகள், கடந்த சில மாதங்களாக பசுமை குடில்களில் குழித்தட்டு நாற்றங்கால்களில் வளர்க்கப்படும் நாற்றுகளை பயன்படுத்தி வருகின்றனர். இது குறித்து மாவட்ட தோட்டக்கலைத் துறை துணை இயக்குனர் (பொ) இமானுவேல் கூறியதாவது:
தர்மபுரி மாவட்ட விவசாயிகள், புது யுத்திகள் மற்றும் துல்லிய பண்ணை திட்டம் ஆகியவற்றில் பயிர் கள், காய்கறிகள், கரும்பு, வாழை, மரவள்ளி கிழங்கு ஆகியவற்றை சாகுபடி செய்து அதிகளவில் வரு வாய் பெற்று வருகின்றனர். மரவள்ளி சாகுபடியில், தற் போது பசுமை குடில்களில், குழித்தட்டுகளில் வளர்க்கப்படும் மரவள்ளி கிழங்கு நாற்றுக்களை வாங்கி பயன்படுத்த தொடங்கியுள்ளனர்.

இந்த முறையில் நுனி குச்சிகள் நடவு செய்யப்படுவதால், வைரஸ் நோய் தாக்குதல் பெரும் அளவு குறைகிறது. வேர்கள் எவ்வித பாதிப்பும் இன்றி தரமான நாற்றுகளாக, குழித்தட்டில் இருந்து எடுத்து நேரடியாக நிலத்தில் நடவு செய்ய முடி கிறது. இதனால், செடிகள் நன்கு வளர்கிறது. நிலத்தில் ஒரு பகுதியில் கருகும் பயிர்களுக்கு உடனடியாக பசுமை குடில்களில் இருந்து, தரமான நாற்று களை மீண்டும் பெற்று நடவு செய்ய முடியும். இதனால், விவசாயிகளுக்கு அறுவடை யின் போது மகசூல் பாதிக்கப்படுவது தடுக்கப்படுகிறது. குழித்தட்டு நாற்றுக்கள் தரமானதாகவும், உரிய வளர்ச்சியுடன் கிடைப்பதால் விவசாயிகளுக்கு மகசூல் அதிகளவில் கிடைக்கிறது. இதனால், தர்மபுரி மாவட்டம் உட்பட தமிழகம் முழுவதும் விவசாயிகள் பசுமை குடில்களில் குழித்தட்டுகளில் வளர்க்கும் மரவள்ளி கிழங்கு நாற்றுக் களை அதிகளவில் வாங்கி நடவு செய்து வருகின்றனர். மாவட்டம் முழுவதும், 80க் கும் மேற்பட்டோர் பசுமை குடில்களில் குழித்தட்டு முறையில் மரவள்ளி கிழங்கு நாற்றுக்கள் தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். பசுமை குடில் அமைத்து நாற்றங்கால் தயாரிக்கவும், விவசாய பணிகள் மேற்கொ ள்ள தோட்டக்கலைத்துறை சார்பாக, 50 சதவீதம் அரசு மானியமாக வழங்கி வரு கிறது. மேலும், சிறு விவசாயிகளுக்கு ஒரு ஏக்கர் சொட்டு நீர் பாசனத்திற்கு, 100 சதவீதம் மானிய மும், அதற்கு மேல் 75 சதவீத மானியமும் வழங்கி வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

இன்றைய வேளாண் செய்திகள்
8.03.2013 A.M

## தேனி சுற்றுவட்டார பகுதிகளில் நெல் வயல்களில் வெள்ளரி சாகுபடி அதிகரிப்பு விவசாயிகள் ஆர்வம்

தேனி,

தேனி சுற்றுவட்டார பகுதிகளில் நெல் சாகுபடி வயல்களில் தற்போது வெள்ளரி சாகுபடி செய்ய விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி உள்ளனர்.

குறுகிய கால பயிர்கள்

தேனி மாவட்டத்தில் கடந்த ஆண்டு தென்மேற்கு பருவ மழை காலம் கடத்திச் சென்று பொய்த்துப் போனது. வட கிழக்கு பருவமழையும் போதிய அளவில் பெய்யாமல் ஏமாற்றியது. இதனால் தேனி மாவட்டத்தில் நெல் சாகுபடி பெரும் பாதிப்பை சந்தித்து உள்ளது. கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் வழக்கத்திற்கும் குறைவாகவே நெல் சாகுபடி செய்யப்பட்டு அறுவடை செய்யப்பட்டது.

வீரபாண்டி பகுதிகளில் ஒவ்வொரு ஆண்டும் இரு போக சாகுபடி செழிப்புடன் நடைபெறும். இந்த முறை போதிய தண்ணீர் இல்லாத தால் ஒரு போக நெல் சாகுபடி மட்டுமே நடந்தது. நெல் நடவு செய்து அறுவடை செய்ய 125 நாட்கள் முதல் 130 நாட்கள் வரை தேவைப்படும். மேலும் நெற் பயிருக்கு தண்ணீரும் அதிகளவில் தேவைப்படும். இதனால் தற்போது குறுகிய காலத்தில் மகசூல் கிடைக்கும் பயிர்களை சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி உள்ளனர்.

வெள்ளரி சாகுபடி

வீரபாண்டி கவுமாரியம்மன் கோவில் சித்திரை திரு விழாவை கருத்தில் கொண்டும், கோடைகால தேவையை கருத் தில் கொண்டும் தேனி சுற்று வட்டாரத்தில் நெல் சாகுபடி வயல்களில் வெள்ளரிக்காய், தர்பூசணி போன்ற வற்றை விவசாயிகள் ஆர்வத்துடன் பயிரிட்டு வருகின்றனர்.

வெள்ளரி செடிகளுக்கு தண்ணீர் தேவை மிகவும் குறைவு என்பதாலும், கோடை காலத்தில் விற்பனை அதி கரிக்கும் என்பதாலும் வீர பாண்டி பகுதியில் நெல் சாகுபடி வயல்களில் வழக்கத்

திற்கும் அதிக அளவில் வெள் ளரி சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. இந்த வெள்ளரி செடி களில் தற்போது அதிக அள வில பூக்கள் பூத்து உள்ளன. இதனால் விளைச்சலுக்கு ஏற்ப விலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

## பயிர்களுக்கு தண்ணீர் வழங்கக்கோரி தாமிரபரணி பாசன விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

ஏரல்

ஏரலில் தாமிரபரணி பாசன விவசாயிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

**ஆர்ப்பாட்டம்**

ஏரல் காந்தி சிலை முன்பு விவசாயிகள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. மாவட்ட செயலாளர் கே.பி.பெருமான் தலைமை தாங்கினார்.

விவசாயத்துக்கு பாதிப்பு இல்லாத வகையில் ஸ்ரீவைகுண்டம் அணையின் கீழ் பகுதியில் புதிய அணை அமைத்து அதன் மூலம் தூத்துக்குடிக்கு 4வது பைப் லைன் மூலம் குடிநீர் வழங்க வேண்டும், ஸ்ரீவைகுண்டம் அணை மற்றும் தாமிரபரணி பாசன குளங்களில் உள்ள அமலைச் செடிகளை அகற்றி தூர்வாரி தண்ணீரை சேமிக்க வேண்டும், ஸ்ரீவைகுண்டம் அணையில் இருந்து தொழிற்சாலைகளுக்கு 20 ஜி.எம்.டி. தண்ணீரை வழங்காமல், கடல்நீரை நன்னீராக்கும் திட்டத்தின் மூலம் தண்ணீர் வழங்க வேண்டும், நிலத்தடி நீரை விற்பனை செய்யக்கூடாது, தண்ணீரின்றி கருகும் நெல், வாழை, வெற்றிலை கொடிக்கால்களுக்கு தண்ணீர் வழங்க வேண்டும், என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர்.

**கலந்து கொண்டவர்கள்**

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு நகர செயலாளர் டி.பெஸ்டி, கொடிக்கால் விவசாய சங்க நிர்வாகி தேவாரம், விவசாய சங்க ஒன்றிய செயலாளர் ஐ.கணபதி, தாமிரபரணி பாசன விவசாயிகள் பாதுகாப்பு போராட்டக்குழு தலைவர் கே.கந்தசாமி, அரூர் சட்டமன்ற உறுப்பினர் பி.டில்லிபாபு ஆகியோர் பேசினர்.

உமரிக்காடு வாழை விவசாய சங்க தலைவர் செந்தூர்பாண்டிய நாடார், இசக்கி, நா.மனோகரன், வி.முத்துராமன், கன்னிமுத்து, சுந்தரம், ஒன்றிய தலைவர் பி.பொன்ராஜ், கே.ராமலிங்கம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## புதுக்கோட்டையில் உழவர் தின விழா வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடந்தது

புதுக்கோட்டை

புதுக்கோட்டையில் உழவர் தினவிழா நடந் தது.

**உழவர் தினவிழா**

புதுக்கோட்டை வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையம் சார்பில் உழவர் தின விழா சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் எம்பெருமாள் தலைமை தாங்கினார்.

இந்த விழாவில் உழவர் மன்ற அமைப்பாளர்கள் பெருந் திரளாக கலந்து கொண்டனர். உழவர் தினவிழாவில் விவ சாயிகள் சாகுபடி செய்த விளை பொருட்களை பார்வை யாளர்களுக்காக கண்காட்சி யாக வைத்து இருந்தனர். மேலும் வேளாண்மைத்துறை மற்றும் வேளாண்மை பொறியியல் துறை சார்பில் தொழிற்நுட்ப கண்காட்சி அமைக்கப்பட்டது.

**விஞ்ஞானிகளுடன் கலந்துரையாடல்**

இந்த விழாவில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின்கீழ் செயல் படுத்தப்படும் நிலக்கடலை குழுமம் இனத்தில் விவசாயிகள் விஞ்ஞானிகள் தொழில்நுட்ப கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த கலந் துரையாடலில் தேசிய பயறு வகை ஆராய்ச்சி மையம் மற்றும் வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தை சார்ந்த விஞ்ஞானிகள் கலந்துகொண்டு தொழில்நுட்ப சந்தேகங்கள் மற்றும் சாகுபடி முறைகள் குறித்து விளக்கம் கேட்டறிந் தனர்.

**நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி...**

இதனைதொடர்ந்து விழாவில் வேளாண்மை இணை இயக்குநர் தலைமை தாங்கி பேசுகையில், நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி கூடுதல் மகசூல் பெற்று உணவு உற்பத்தினை அதிகப்படுத்த வேண்டுமென விவசாயிகளுக்கு வேண்டு கோள் விடுத்தார்.

வம்பன் வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் டாக்டர் வைரவன் பேசு கையில் விவசாயிகள் நவீன தொழில்நுட்பங்களை, வேளாண் அறிவியல் நிலையத்தில் வழங்கப்படும் பயிற்சிகளில் கலந்துகொண்டு சாகுபடி செய்து அதிக அளவில் மகசூல் பெற வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

**நிலக்கடலையில் அதிக மகசூல்**

உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலரும், தரக்கட்டுப்பாடு உதவி இயக்குநர் (பொறுப்பு) இராஜ சேகரன் நிலக்கடலையில் அதிக மகசூல் எடுப்பதற்கான தொழில்நுட்பங்களை விரிவாக எடுத்துக்கூறினார். வேளாண் வணிக துணை இயக்குநர் அண்ணாமலை கூறுகையில் , விவசாயிகள் அன்றாட சந்தை நிலவரங்களை அலைபேசி மூலம் அறிந்துகொண்டு விளை பொருட்களை சந்தைப்படுத்த வேண்டும் எனவும் அனைத்து விவசாயிகளும் அலைபேசி எண்களை பதிவு செய்து கொள்ளுதல் அவசியம் எனவும் வேண்டுகோள் விடுத்தார்.

வேளாண்மை துணை இயக்குநர் மத்திய அரசு திட்டம் சதானந்தம் மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் மத்திய அரசு திட்டங்களை விவசாயிகள் முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண் டும் என கேட்டுக் கொண் டார்.

**விவசாய கண்காட்சி**

வேளாண் பொறியியல் துறை அலுவலர்கள் கண்ணன் மற்றும் ரமேஷ் வேளாண் பொறியியல் துறையில் செயல் படுத்தப்படும் திட்டங்களை விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துக் கூறினார். இந்தியன் பொட்டாஷ் நிறுவனம் மற்றும் தனுக்கா அக்ரிடெக் நிறுவனங்கள் விவசாய கண்காட்சி அமைத்து தங்கள் நிறுவன செயல்பாடுகளை விவசாயிகளுக்கு எடுத்துக்கூறினார்கள். நடப்பு ஆண்டு சிறப்பாக சாகுபடி செய்த உழவர் பயிற்சி நிலைய அமைப்பாளர்களுக்கு பரிசுகளை வேளாண் மை இணை இயக்குநர் எம்பெருமாள் வழங்கினார். முடிவில் உழவர் மன்ற அமைப் பாளர்கள் கூவாட்டுபட்டி முருகேசன், அறந்தாங்கி மாரி முத்து, மற்றும் கறம்பகாடு காமராஜ் ஆகியோர் நன்றி கூறி பேசினர்.

## டெல்டா மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு முழுமையான நிவாரணம் வழங்க வேண்டும் விவசாயிகள் சங்க மாநில தலைவர் வேண்டுகோள்

திருவாரூர்

டெல்டா மாவட்டங் களில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு முழு மையான கணக் கெடுப்பு நடத்தி நிவாரணம் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் சங்க மாநில தலைவரும், எம்.எல்.ஏ.வுமான பால கிருஷ்ணன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில தலைவரும், எம்.எல்.ஏ.வுமான பாலகிருஷ் ணன் திருவாரூரில் நிருபர் களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறிய தாவது:

**நிவாரணம்**

டெல்டா மாவட்ட விவசா யிகளுக்கு தமிழக அரசு நிவா ரணம் வழங்கி வருகிறது. இது வரை இல்லாத வகையில் சென்னை நீங்கலாக 31 மாவட் டத்தை வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவித்து இந்த நிவாரண அறிவிப்பை வெளியிட்டது பாராட்டத்தக் கதாகும். ஆனால், தமிழ்நாடு விவசாயிகள் சங்கமும், ஏனைய விவசாயிகளும் எதிர் பார்த்த வகையில் நிவாரண அறிவிப்பு இல்லை.

அதிலும் வேலை இழந்து பாதிக்கப்பட்டுள்ள விவசாய தொழிலாளர்களுக்கு எவ்வித நிவாரணமும் அறிவிக்கப் படாதது ஏமாற்றம் அளிப்ப தாக உள்ளது. மேலும் பாதிக்கப்பட்டுள்ள விவசாய நிலங்களை கணக்கெடுப்பதி லும் நிறைய குளறுபடிகள் ஏற்பட்டுள்ளன.

**மீண்டும் கணக்கெடுப்பு**

எனவே, பாதிக்கப்பட்டுள்ள விவசாய நிலங்கள் குறித்து மீண்டும் முறையான கணக் கெடுப்பு நடத்தி முழுமையான நிவாரணம் வழங்க வேண்டும். நீரின்றி விவசாயம் செய்யாமல் தங்கள் நிலத்தை தரிசாக வைத்துள்ள விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும். இதற்கான அறிவிப்புகளை நாளை(சனிக்கிழமை) தஞ்சை யில் நடக்கும் பாராட்டு விழா வில் முதல்அமைச்சர் அறி விப்பார் என்று எதிர்பார்க்கின் றோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

## திருவாரூர் மாவட்டத்தில் 5,160 பண்ணை குட்டைகள் அமைக்க திட்டம்

திருவாரூர்

திருவாரூர் மாவட்டத்தில் 5160 பண்ணை குட்டைகள் அமைக்க திட்டமிடப் பட்டுள்ள தாக கலெக்டர் நடராசன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் கூறியிருப்பதாவது:

**பண்ணை குட்டைகள்**

தமிழ்நாட்டில் வறட்சி பாதித்த டெல்டா மாவட்டங் களில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுத்திட்டத்தின் கீழ் 15 ஆயிரம் பண்ணை குட் டைகள் அமைக்கப்படும் என தமிழக அரசு சார்பில் அறிவிக் கப்பட்டது.

திருவாரூர் மாவட்டத்தில் உள்ள 430 ஊராட்சிகளிலும் ரூ.32 கோடியே 89 லட்சம் மதிப்பீட்டில் 5,160 பண்ணைக் குட்டைகள் அமைக்க திட்ட மிடப்பட்டு பணிகள் மேற் கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திருவாரூர் மாவட்டத்தில் உள்ள ஆதிதிராவிடர், பழங் குடியின விவசாயிகள், சிறு மற்றும் குறு விவசாயிகளில் பண்ணை குட்டைகள் அமைத் திட விரும்புவோர் ஊராட்சி தலைவர், உதவி வேளாண் அலுவலர் அல்லது வட்டார வளர்ச்சி அலுவலரை தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அந்த அறிக் கையில் கூறப்பட்டுள்ளது.

## நாமக்கல்லில் ரூ.90 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

நாமக்கல்

நாமக்கல்லில் நேற்று நடைபெற்ற ஏலத்தில் 5,500 மூட்டை பருத்தி ரூ.90 லட்சத்துக்கு ஏலம் போனது.

**பருத்தி ஏலம்**

நாமக்கல் திருச்செங்கோடு ரோட்டில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் ஒவ்வொரு வாரமும் வியாழக் கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது.

வழக்கம்போல் நேற்று நடந்த ஏலத்துக்கு நாமக்கல், எருமப்பட்டி, சேந்தமங்கலம், ராசிபுரம் என மாவட்டம் முழுவதும் இருந்தும், அண்டை மாவட்டங்களில் இருந்தும் விவசாயிகள் ஏறத்தாழ 5,500 மூட்டை பருத்தியை விற் பனைக்கு கொண்டு வந் திருந்தனர். மறைமுக ஏலம் மூலம் பருத்தி மூட்டைகள் விற்பனை செய்யப்பட்டன.

**ரூ.90 லட்சத்துக்கு ஏலம்**

இதன்படி ஆர்.சி.எச். ரக பருத்தி குவிண்டால் ரூ.3 ஆயிரத்து 910 முதல் ரூ.4 ஆயிரத்து 479 வரைக்கும், டி.சி.எச். ரக பருத்தி ரூ.4 ஆயிரத்து 700 முதல் ரூ.5 ஆயிரத்து 389 வரையிலும், சுரபி ரக பருத்தி ரூ.4 ஆயிரத்து 510 முதல் ரூ.4 ஆயிரத்து 937 வரையிலும் ஏலம் போனது.

இந்த பருத்தி மூட்டைகளை கோவை, அவினாசி, திருப்பூர், திருச்செங்கோடு, ஆத்தூர் பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர். நேற்று ஏலத்துக்கு வந்த பருத்தி மூட்டைகள் ஏறத்தாழ ரூ.90 லட்சத்துக்கு ஏலம் போனதாக கூட்டுறவு சங்க அதிகாரிகள் தெரி வித்தனர்.